(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 241.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2018 பெப்ருவரி 22 வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

112/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தம்புத்தேகம வைத்தியசாலையின் சிகிச்சைக்கூடக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கையளிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அக்கட்டடத்திற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட ஒப்பந்ததாரரின் பெயர் யாதென்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு மொத்தப் பணத்தொகையும் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், செலுத்தப்பட்ட பணத்தொகை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒப்பந்ததாரரின் ஏதேனும் பணத்தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி கட்டடத்தின் சுவர்களில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இதனால் நோயாளிகளினதும் வைத்தியசாலையின் பணியாளர்களினதும் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இற்றைவரை இக்கட்டடம் திருத்தப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி கட்டடத்தைத் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தேதி யாதென்பதையும்;

(iii) மேற்படி திருத்தப்பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரின் பெயர் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

2.

931/ '16

கௌரவ சந்திம கமகே,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (7)

(அ) (i) இலங்கை மின்சார சபை, தனியார் துறையிடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்கையில், பெறுகை நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென மின்சார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறித்து அறிவாரா;

(ii) இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மின்சார கொள்வனவுகளின்போது கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அச்சந்தர்ப்பங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1043/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) 2016 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபையின் வருடாந்த அமர்வுக்கான சனாதிபதி அவர்களின் விஜயத்தின்போது கலந்து கொண்ட தூதுக் குழுவினர் எத்தனை பேர்;

(ii) மேற்படி விஜயத்தில் கலந்து கொண்ட ஆட்களின் பெயர்கள் மற்றும் இவர்கள் தூதுக் குழுவில் உள்ளடங்கிய அடிப்படை வெவ்வேறாக யாவை;

(iii) மேற்படி விஜயத்துக்காக அரசு, அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்ட சபைகள் மற்றும் அரச கம்பனிகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தச் செலவுகள் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1117/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் இயங்கும் திவிநெகும சமூக மைய வங்கிகளின் (சமுர்த்தி வங்கிகள்) எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வங்கிகள் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) ஒவ்வொரு வங்கிக் கிளையிலிருந்தும் அனுகூலங்களை பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வங்கியிலும் பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் இவர்களின் பெயர்கள், பதவிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) தற்போது மேற்படி வங்கிகளில் ஊழியர் வெற்றிடங்கள் உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி வெற்றிடங்களுக்கு ஊழியர்களை ஆட்சேர்க்கும் முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1191/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 1983 ஆம் ஆண்டளவில் புத்தளம் மாவட்டத்தில் இலங்கை மின்சார சபையினால் மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போதைக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 1984 முதல் 2009 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(iv) 2009 ஆம் ஆண்டில் யுத்த நிலவரம் முடிவடைந்த பின்னர் 2015 ஆம் ஆண்டு வரை மின்சாரம் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில் மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை ஆண்டு வாரியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1278/ '16

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (6)

(அ) (i) 2015.10.01 ஆம் திகதியாகின்றபோது கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கத்திற்கு சொந்தமாகவிருந்த மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) 2016.06.11 ஆம் திகதியாகின்றபோது மேற்படி சங்கத்திற்கு சொந்தமாகவிருந்த நிலையான வைப்புக்களின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது மேற்படி சங்கத்திலிருந்து கடன் பெறுவதற்காக விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளில், கடன் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் இற்றைவரை கடன் தொகை விடுவிக்கப்படாதுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளுக்கு செலுத்த வேண்டியுள்ள மொத்த கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி கடன் விண்ணப்பதாரிகளுக்கு கடன் விடுவிக்கப்பட தாமதம் ஏற்பட்டுள்ளமைக்கான காரணம் யாதென்பதையும்;

(vii) மேற்படி சங்கம் தனது அங்கத்தவர்களுக்கு உரியவாறு கடன் தொகையை விடுவிப்பதற்கு இயலாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(viii) ஆமெனில், மேற்படி சங்கத்தின் நிதி நிருவாகத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1298/ '16

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் பணியாற்றும் கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கையானது ஒவ்வொரு பதவிக்கமைய தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) மாத்தறை மாவட்டத்தின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா பதவியணியில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அந்த வெற்றிடங்களின் எண்ணிக்கையானது தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கமைய தனித்தனியாக யாது என்பதையும்;

(v) மேற்படி (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(vi) ஆமெனின், அதற்கு ஏற்புடையதான ஆட்சேர்ப்பு நடைமுறை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1376/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட பிரேரணை இலக்கம் 130 இற்கு இணங்க, அதிக விளைச்சலைப் பெற்றுக்கொடுக்கின்ற விதைகளை அறிமுகப்படுத்தும் கம்பனிகளுக்கு பகுதியளவு வரி விலக்களிப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டதா என்பதையும்;

(ii) இவ்வாறான வரி ஊக்குவிப்பை பெற்றுக்கொண்ட நிறுவனங்களின் பெயர் பட்டியலை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி தீர்மானத்திற்கேற்ப, 2015 சனவரி 01 ஆம் திகதியளவில், இறக்குமதி வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த, இயந்திர சாதனங்களின் பட்டியலொன்றையும்;

(ii) 2016 சனவரி 01 ஆம் திகதிக்குப் பின்னர், இறக்குமதி வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த, இயந்திர சாதனங்களின் பட்டியலொன்றையும்;

சமர்ப்பிப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

1466/ '16

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்களில் வசிக்கின்ற குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியங்களிலிருந்து இலவசமாக கூரைத் தகடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) பன்முகப்படுத்தப்பட்ட நிதியங்களை பயன்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட கூரைத் தகடுகள் பகிர்ந்தளிக்கப்படுதல் தடைசெய்யப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை;

(iv) மேற்படி தடையை நீக்கி, முன்னர் இருந்ததைப்போல் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஊடாக கூரைத் தகடுகளைப் பகிர்ந்தளிக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1584/ '17

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஹொரணை, போருவதண்ட, வகவத்தை, பர்த் புதிய வீடமைப்புத் தொகுதியில் 39 ஆம் இலக்க முகவரியில் வதியும் திருமதி. பீ. சீத்தாதேவி ஹொரணை, பர்த் தோட்டத்தின் சிறுவர் பூங்கா நிருவாகியாக சேவையில் இணைந்த திகதி யாதென்பதையும்;

(ii) இவர் சேவையிலிருந்து விலகிய திகதி யாதென்பதையும்;

(iii) 26 வருடகால சேவையை முடிவுறுத்தும்போது இவருக்குக் கிடைக்க வேண்டிய நட்டஈட்டுத் தொகை மற்றும் பணிக்கொடைத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அத்தொகையைப் பெற்றுக்கொடுப்பதற்கு தொழில் திணைக்களத்தினால் 2016.11.26 ஆம் திகதி குறித்துரைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நட்டஈட்டுத் தொகை மற்றும் பணிக்கொடைத் தொகை செலுத்தப்படாதிருப்பது ஏனென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

11.

1595/ '17

கௌரவ அசோக்க பிரியந்த,— மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் தற்சமயம் இயங்கிவரும் உள்ளூராட்சி நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனத்தின் ஊடாக சேவை வழங்கப்படும் மக்களின் எண்ணிக்கை, காணிப் பரப்பளவு மற்றும் கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மக்களுக்கு கூடுதலான வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்காக புத்தளம் மாவட்டத்தில் புதிதாக நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) இவ்வாறு முன்மொழியப்பட்டுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களை விரைவாக நிறுவுவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

1601/ '17

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையின் தேசிய வலுசக்திக் கொள்கை காலங்கடந்துவிட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) இலங்கையின் சமகால மற்றும் எதிர்கால எதிர்பார்ப்புகளுக்கு பொருத்தமான தேசிய வலுசக்தி கொள்கையொன்று தேவை என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி புதிய தேசிய வலுசக்தி கொள்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

1603/ '17

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கொழும்பு நகருக்கு மின்சாரத்தை வழங்கும் நிலக்கீழ் மின்சார வழங்கல் முறையொன்று சுமார் 03 வருட காலமாக செயலிழந்துள்ளமை பற்றி அறிவாரா;

(ii) மேற்படி மின்சார வழங்கல் முறையின் மின்சார வழங்கல் கொள்ளளவு யாது;

(iii) குறிப்பிட்ட வழங்கல் முறையை வழமை நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் தாமதம் அடைவதற்கான காரணம் யாது;

(iv) மேற்படி வழங்கல் முறையின் திருத்தியமைத்தல் தாமதமடைதல் தொடர்பில் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் யார்;

(v) மேற்படி ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் எதிராக அமைச்சு அல்லது இலங்கை மின்சார சபையினால் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுங்காற்று நடவடிக்கை வெவ்வேறாக யாது;

(vi) கொழும்பு நகரில் தொடர்ச்சியான மின்சார வழங்கலை உறுதிப்படுத்தும் முகமாக மின் அனுப்பல் முறைமையினை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

1622/ '17

கௌரவ ஹேஷான் விதானகே,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையின் சீனித் தேவையைப் பூர்த்தி செய்கையில் செவனகல சீனித் தொழிற்சாலை மிக முக்கியமானது என்பதையும்;

(ii) அதன் மூலம் பெருந்தொகையான நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன என்பதையும்;

(iii) தற்போது இத்தொழிற்சாலையை சார்ந்ததாக வழங்கப்பட்டுள்ள காணிகளில் விவசாயிகள் கரும்புச் செய்கையை மேற்கொள்ளாது வேறு பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) செவனகல சீனித் தொழிற்சாலை சார்ந்ததாக கரும்புச் செய்கைக்கென விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணியின் ஹெக்டயார் பரப்பளவு எவ்வளவு;

(ii) தற்போது கரும்புச் செய்கை மேற்கொள்ளப்படுகின்ற காணியின் ஹெக்டயார் பரப்பளவு எவ்வளவு;

(iii) நாளுக்கு நாள் கரும்பு விவசாயி வேறு பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டுவருவதால் இத்தொழிற்சாலையிலிருந்து எதிர்பார்க்கப்படும் உற்பத்தியைப் பெற்றுக்காள்ள முடியாது போகலாம் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iv) ஆமெனில், இத்தொழிற்சாலையிலிருந்து அதிக உற்பத்தியைப் பெற்றுக் கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## அனுதாபப் பிரேரணை

1.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ (பேராசிரியர்) டபிள்யூ.ஏ.விஸ்வா வர்ணபால.

2.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் காலஞ்சென்ற கௌரவ ஈலியன் எம். நானாயக்கார.

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2018, மார்ச்சு மாதம் 06 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பாராளுமன்றத்தின் திருத்தப்பட்ட வரைவு நிலையியற் கட்டளைகள்,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2018 பெப்ருவரி 19),— "பாராளுமன்றத்தின் திருத்தப்பட்ட வரைவு நிலையியற் கட்டளைகள் தொடர்பாக 2017 நவம்பர் மாதம் 07 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் அறிக்கையினைப் பரிசீலித்தல்." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 2.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2018 பெப்ருவரி 19),— "பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தை தொடர்பில், 2017 நவம்பர் மாதம் 07 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையின் இறுதி வரைவு அங்கீகரிக்கப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 3.

மதுவரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 6(2) ஆம் பிரிவின் கீழ் தொலைக்காட்சி நாடகம், திரைப்படம் மற்றும் வர்த்தக அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 நவெம்பர் 07 ஆம் திகதிய 2044/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உப தலைவரின் ஊதியங்கள் மற்றும் ஆணைக்குழு அங்கத்தவர்களின் கொடுப்பனவுகளைத் திருத்தியமைத்தல்,— 1991 இன் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இவ் ஆணைக்குழு அங்கத்தவர்களின் ஊதியங்கள் சட்டத்தின் 4(8) ஆம் பிரிவுக்கு ஏற்ப பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படல் வேண்டுமென்பதையும்;

அதனால், 2017.11.14 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உப தலைவரின் ஊதியங்கள் மற்றும் இவ் ஆணைக்குழு அங்கத்தவர்களின் கொடுப்பனவுகளைக் கீழ்வருமாறு திருத்தியமைக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்;

(i) ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உப தலைவருக்கு முறையே ரூபா 75,000/- மற்றும் ரூபா 60,000/- மாதாந்த ஊதியங்களை வழங்குவதற்கும்;

(ii) ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு ஒரு கூட்ட அமர்வுக்கு ஒருவருக்கு ரூபா 6,000/- கொடுப்பனவொன்றை வழங்குவதற்கும்;

(iii) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 13/2008(iv)இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக தலைவருக்கு 225 லீற்றர் எரிபொருளின் விலைக்குச் சமனான மாதாந்த எரிபொருள் கொடுப்பனவொன்றையும், உப தலைவருக்கு 170 லீற்றர் எரிபொருளின் விலைக்குச் சமனான மாதாந்த எரிபொருள் கொடுப்பனவொன்றையும் வழங்குவதற்கும்;

அதற்கேற்ப, 1991 இன் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் 4(8) ஆம் பிரிவுக்கு அமைவாக, தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர், உப தலைவர் மற்றும் ஆணைக்குழு அங்கத்தவர்களுக்கு அரசின் திரட்டு நிதியத்திற்கு செலவாக அமையும் வகையில் ஊதியங்களைச் செலுத்துவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153 உறுப்புரையின் பிரகாரம், சனாதிபதி அவர்களால் அரசியலமைப்புச் சபையின் விதப்புரைக்கமைய 2015.11.27 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சம்பளம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு அரசாங்க திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்பட வேண்டியுள்ளதாதலாலும்;

சனாதிபதியவர்களினால் 2017.11.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கான 2017.12.05 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு பின்வருமாறு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்:—

(அ) 2015.11.27 ஆம் திகதி முதல் அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006 இற்கமைய SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் 08 ஆவது படிநிலையில் இருத்தி சம்பளத்தைச் செலுத்தல் மற்றும் பதவிக்குரித்தான ஏனைய கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும்;

(ஆ) அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 3/2016 இற்கமைய 2016.01.01 ஆம் திகதி முதல் சம்பளத்தை மாற்றியமைக்கும்போது SL - 4 சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் அச்சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் சம்பளத்தை மாற்றியமைத்துச் செலுத்துவதற்கும்; மற்றும்

(இ) அச்சம்பள அளவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வருடாந்த சம்பள ஏற்றத்தைச் செலுத்துவதற்கும்.

அதற்கேற்ப, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 153(2) உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமையதிபதி, திரு. எச்.எம். காமினி விஜேசிங்க அவர்களுக்கு அரசாங்கத் திரட்டு நிதியத்தில் பொறுப்பிக்கப்படுமாறு மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

* 7.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 நவெம்பர் 27 ஆம் திகதிய 2047/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2017 திசெம்பர் 11) [1].

* 9.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2017 திசெம்பர் 11) [1].

* 10.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

புலமைச் சொத்து (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் 2016 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை (விலைகளின் மீதான உச்சவரம்பு) ஒழுங்குவிதிகள் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 திசெம்பர் 14 ஆம் திகதிய 2049/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 17.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்.— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 44 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 321 ஆம் பிரிவின் கீழ் 2017 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (சிறியவர்த்தகக் கலன்கள்) ஒழுங்குவிதிகள் தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2017 மே 04 ஆம் திகதிய 2017/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாயச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

23.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---